# யூலை – 29 – திங்கள்

## புனித மார்த்தா - இயேசுவின் சீடர்

## தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர்: திபா. 106:21

-----------------------------------------------------------------

**முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 12:15– 24,30–34**

அந்நாட்களில் மோசே திரும்பி மலையிலிருந்து இறங்கி வந்தார். முன்பின் இருபுறமும் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பலகைகள் இரண்டும் அவர் கையில் இருந்தன. அப்பலகைகள் கடவுளால் செய்யப்பட்டவை. பலகைகள் மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்தும் கடவுள் எழுதியதே. அந்நேரத்தில் மக்கள் எழுப்பிய கூச்சலைக் கேட்ட யோசுவா மோசேயை நோக்கி, "இது பாளையத்திலிருந்து எழும் போர்முழக்கம்" என்றார். அதற்கு மோசே, "இது வெற்றி முழக்கமோ தோல்விக்குரலோ அன்று. பாட்டொலிதான் எனக்குக் கேட்கிறது" என்றார். பாளையத்தை அவர் நெருங்கிவந்தபோது கன்றுக் குட்டியையும் நடனங்களையும் கண்டார். மோசேக்குச் சினம் மூண்டது. அவர் தம் கையிலிருந்த பலகைகளை மலையடிவாரத்தில் வீசியெறிந்து உடைத்துப்போட்டார். அவர்கள் செய்து வைத்திருந்த கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாகுமட்டும் அதை இடித்துத் தண்ணீரில் தூவி, இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச்செய்தார். பின்னர் மோசே ஆரோனை நோக்கி, "இம்மக்கள் உமக்கு என்னசெய்தார்கள்? இவர்கள்மேல் பெரும் பாவம் வந்துசேரச்செய்துவிட்டீரே!" என்றுகேட்டார். அதற்கு ஆரோன், "என்தலைவராகிய நீர் சினம்கொள்ளவேண்டாம். இம்மக்கள் பொல்லாதவர்கள் என்பது உமக்குத்தெரியுமே! அவர்கள் என்னைநோக்கி, "எங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களைச் செய்துகொடும். எங்களை எகிப்து நாட்டினின்று நடத்திவந்த அந்த ஆள் மோசேக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை" என்றனர். நானும் அவர்களிடம் "பொன் அணிந்திருப்பவர்கள் கழற்றித் தாருங்கள்" என்றேன். அவர்களும் என்னிடம் தந்தனர். நான் அதனை நெருப்பில்போட, இந்தக் கன்றுக்குட்டி வெளிப்பட்டது" என்றார். மறுநாள் மோசே மக்களை நோக்கி, "நீங்கள் பெரும்பாவம் செய்துவிட்டீர்கள் இப்போது நான் மலைமேலேறி ஆண்டவரிடம் செல்லப்போகிறேன். அங்கே ஒரு வேளை உங்கள் பாவத்திற்காக நான் கழுவாய்செய்ய இயலும்" என்றார். அவ்வாறே மோசே ஆண்டவரிடம் திரும்பிவந்து, "ஐயோ, இம்மக்கள் தங்களுக்காகப் பொன்னால் தெய்வங்களை உருவாக்கிப் பெரும்பாவம் செய்து விட்டார்கள். இப்போதும், நீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளும். இல்லையேல், நீர் எழுதிய உம்நூலிலிருந்து என்பெயரை நீக்கி விடும்" என்றார். ஆண்டவரோ மோசேயிடம், "எவன் எனக்கு எதிராகப் பாவம்செய்தானோ, அவனையே என்நூலிலிருந்து நீக்கிவிடுவேன். நீ இப்போதே புறப்பட்டுப்போ. உன்னிடம் நான் கூறியுள்ளபடி மக்களை நடத்திச் செல். இதோ என்தூதர் உன்முன்னே செல்வார். ஆயினும் நான் தண்டனைத்தீர்ப்பு வழங்கும் நாளில் அவர்கள் பாவத்தை அவர்கள் மேலேயே சுமத்துவேன்" என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர்.

**நற்செய்தி : மத்தேயு 13 : 31 – 35**

அக்காலத்தில், இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை "ஒருவர் கடுகுவிதையை எடுத்துத் தம்வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும்விடச் சிறியது. ஆனாலும், அது வளரும்போது மற்றெல்லாச் செடிகளையும்விடப் பெரியதாகும். வானத்துப் பறவைகள் அதன்கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும். விண்ணரசு இக்கடுகு விதைக்கு ஒப்பாகும். அவர் அவர்களுக்குக்கூறிய வேறு ஓர் உவமை. "பெண் ஒருவர் புளிப்புமாவை எடுத்து மூன்றுமரக்கால் மாவில் பிசைந்துவைத்தார். மாவுமுழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்புமாவுக்கு ஒப்பாகும்."இவற்றையெல்லாம் இயேசு மக்கள் கூட்டத்துக்கு உவமைகள் வாயிலாக உரைத்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு எதையும் பேசவில்லை. "நான் உவமைகள் வாயிலாகப் பேசுவேன் உலகத் தோற்றமுதல் மறைந்திருப்பவற்றை விளக்குவேன்" என்று இறைவாக்கினர் உரைத்தது இவ்வாறு நிறைவேறியது.

**தியானம் :** இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் இறைவனின் திட்டத்திற்கேற்ப வாழ்கின்றோமா? அல்லது அவருக்கு விருப்பமில்லாத வாழ்க்கை வாழ்ந்து அவருக்கு முன்னுரிமை கொடுக்கத் தவறிவிடுகிறோமா? என்று சிந்தித்து வாழ அழைத்து நிற்கின்றது. எப்போது எமக்குத் தேவைகள் ஏற்படுகிறதோ அந்த நேரத்தில் அவர் நிறைவாகக் கொடுக்கிறார். ஆனால் நாங்களோ அதை சிந்திக்காது அவரை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அன்று இஸ்ராயேல் மக்களை பலவிதமான இன்னல்களிலிருந்து அவர் காப்பாற்றினார். ஆனால் அவர்கள் அதை மறந்தவர்களாக தங்களுக்கென்று பொன்னாலான கன்றுக் குட்டியை செய்து அதை கடவுளுக்கு நிகராக வைத்து வழிபட்டார்கள். இறைவன் சினங்கொள்ளத் தாமதிப்பவர் மாறாக மீண்டும் மீண்டும் அவருக்கு எதிராக செயற்பட்டார்களோ அவர்களை அடியோடு அழித்து விடுவார். இதே போன்றுதான் அவர்களை அழிக்க முற்பட்ட போது மோசே அவர்களுக்காக மன்றாடி அவர்களை அவ் அழிவிலிருந்து பாதுகாத்தார். இவ்வாறு நாங்களும் இறைவன் செய்தவைகளை மறந்து வேறு தெய்வ வழிபாடுகளில் ஈடுபட்டு அருவருக்குத் தக்க வகையில் வாழ்ந்தோமேயானால் எமக்கும் அழிவு நிற்சயம். இருந்தும் எம்மத்தியில் மீண்டும் மீண்டும் இவ்வாறான செயல்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. அன்று மார்த்தா மரியா வீட்டில் இயேசு சென்ற போது மரியாவோ யேசுவின் பாதத்தில் அமர்ந்திருந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டேயிருந்தாள். ஆனால் மாரத்தாவோ வேறு பல காரியங்களில் ஈடுபட்டிருந்தாள். ஏனெனில் இயேசுவை தனது உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள ஆசைப்பட்டாள். இன்று எங்கள் உள்ளமாகிய இல்லத்திலும் இறைமகன் இயேசு குடிகொள்ள ஆசைப்படுகிறார். அவரது ஆசையை நிறைவேற்ற நாங்கள் தயாராக உள்ளோமா? அன்று சக்கேயுவிடம் இறங்கி வா இன்று நான் உன் வீட்டில் தங்கவேண்டும் என்று கூறுகின்றார். எனவே நாங்களும் அவரை எம் உள்ளத்தில் வரவேற்க தகுதியுள்ளவர்களாக மாறுவோம்.